# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 06 | கிறிஸ்தவம் | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ........................................................................................

### பகுதி -I

**01) பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. உலகப் படைப்பின் வரலாற்றில் கடவுள் உயிருள்ளவற்றைப் படைத்தது,
1) முதலாம் நாளில் 2) மூன்றாம் நாளில் 3) ஐந்தாம் நாளில் 4) ஏழாம் நாளில்

02. கடவுள் எத்தனையாம் நாளினை ஆசீர்வதித்துப் புனிதப்படுத்தினார்?
1) முதலாம் நாளினை 2) ஏழாம் நாளினை 3) நான்காம் நாளினை 4) ஐந்தாம் நாளினை

03. இயேசுவின் பிறப்பின் செய்தியை முதலில் மரியாவுக்கு அறிவித்தவர்,
1) மிக்கேல் தூதர் 2) கபிரியேல் தூதர் 3) பிலாத்து 4) ஏரோது மன்னன்

04. இயேசு 12 வயதில் தாய் மரியாவுடனும் தந்தை யோசேப்புடனும் சென்று காணாமல் போன இடத்தின் பெயர்,
1) யூதேயா 2) சமாரியா 3) எகிப்து 4) எருசலேம்

05. இயேசுவின் சிலுவையைச் சுமப்பதற்கு உதவியவர்,
1) சீரேன் ஊர் சீமொன் 2) பிலிப்பு 3) யூதா 4) சின்னப்பர்

06. எமக்கு நிலை வாழ்வு கிடைத்தது,
1) இயேசுவின் பாடுகளால் 2) இயேசுவின் மரணத்தினால்
3) இயேசுவின் உயிர்ப்பால் 4) இயேசுவின் விண்ணேற்பால்

07. இயேசு எத்தனை வயதில் திருமுழுக்குப் பெற்று பணியை ஆரம்பித்தார்?
1) ஏழு வயதில் 2) 18 வயதில் 3) இருபது வயதில் 4) முப்பது வயதில்

08. இயேசுவின் பணிக்கு வழியை ஆயத்தம் செய்தவர்
1) திருமுழுக்கு யோவான் 2) பிலிப்பு
3) யோசேப்பு 4) இராயப்பர்

09. இயேசு உயிர்த்தெழுந்து எத்தனை நாட்களுக்குப் பின் விண்ணேற்றம் அடைந்தார்?
1) முப்பது 2) நாற்பது 3) ஐம்பது 4) அறுபது

10. எத்தியோப்பிய அரச அலுவலருக்குத் திருமுழுக்குக் கொடுத்தவர்,
1) பிலிப்பு 2) யூதா 3) சின்னப்பர் 4) பர்ணபா

11. கிறிஸ்தவனில் இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்று,
1) கோபம் 2) சண்டை 3) கீழ்ப்படிவு 4) பொறாமை

12. நல்ல மேய்ப்பனில் காணப்படவேண்டிய குணாதிசயம்,
1) பொறாமை 2) இரக்கம் 3) சுயநலம் 4) பெருமை


kalvi.lk

13. கர்த்தர் என் .................................... இருக்கிறார்.
1) துணையாக 2) தலைவராக 3) நண்பராக 4) மேய்ப்பராக

14. நாம் காலையும் மாலையும் ................................ வேண்டும்.
1) ஜெபிக்க 2) விளையாட 3) படம் பார்க்க 4) நித்திரை செய்ய

15. யேசு வளர்ந்த ஊர் எது?
1) பெத்லகேம் 2) நசரேத்து 3) கானான் 4) எகிப்து

16. கிறிஸ்துவின் நற்செய்திப் பணிக்காக கல்லால் எறியப்பட்டு கொலை செய்யப்பட்டவர்
1) இராயப்பர் 2) சின்னப்பர் 3) ஸ்தேவான் 4) பிலிப்பு

17. இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகளின் எண்ணிக்கை,
1) நான்கு 2) மூன்று 3) இரண்டு 4) ஐந்து

18. யூதர்களின் விழா எனப்படுவது,
1) பாஸ்கா 2) கிறிஸ்துவின் பிறப்பு 3) திருவிழிப்பு 4) விருந்துண்ணல்

19. தந்தை, மகன், தூய ஆவி மூவரும் ஒன்றாக வெளிப்பட்ட சந்தர்ப்பம்,
1) கிறிஸ்துவின் புதுமையில் 2) எருசலேமில்
3) கிறிஸ்துவின் திருமுழுக்கில் 4) கடல் மீது நடந்த பொழுது

20. படைப்பின் சிகரமாக விளங்குவது,
1) சூரியன் 2) இயற்கை 3) நீர் நிலைகள் 4) மனிதன்

(20x2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

**02) பின்வருவனவற்றிற்கு சரி (✓) பிழை (×) அடையாளமிடுக.**

1. இயேசுவின் பிறப்பு முதலில் இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ( )
2. யூதர்களின் முக்கிய விழா பாஸ்கா விழாவாகும். ( )
3. ஈசாக் மந்தை மேய்ப்புத் தொழில் செய்தார். ( )
4. கடவுளுக்கு ஏற்புடையவராக பரிசேயன் வீடு திரும்பினார். ( )
5. திருவிவிலியத்தில் முதல் 7 புத்தகமும் பஞ்சாகமம் ஆகும். ( )
6. கிறிஸ்தவ வாழ்விற்கு செபம் அவசியமாகும். ( )
7. லேவியன் யூதனுக்கு உதவி செய்தான். ( )
8. பார்த்திமேயு நம்பிக்கையினால் பார்வை பெற்றான். ( )
9. இயேசு சிலுவையுடன் மூன்று முறை விழுந்தார். ( )
10. கிறிஸ்தவ பிள்ளையாக வாழ தாழ்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். ( )

(10x1 10 புள்ளிகள்)

**03) பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளியை நிரப்புக.**

1. கடவுள் தன் உருவில் மனிதரைப் படைத்தார் ................................................ அவர்களைப் படைத்தார்.
2. "ஆலயத்தை இடித்து ....................... கட்டுகிறவனே உன்னை நீயே காப்பாற்று"
3. "எதிர்நோக்கைத் தரும் கடவுள், நம்பிக்கையால் உண்டாகும் ............. உங்களை நிரப்புவாராக"
4. "ஆண்டவரே என்றென்றைக்கும் உள்ளது உமது ............. அது நிலைத்துள்ளது"
5. உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ............. உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக"

(5x2 = 10 புள்ளிகள்)

❖ **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1) இயேசுவின் பிறப்புடன் தொடர்புபட்ட சந்தர்ப்பங்கள் யாவை?
2) யூத சட்டத்தின்படி பன்னிரண்டு வயதை அடைந்த ஆண்களுக்கு கிடைக்கும் பொறுப்புக்கள் எவை?
3) " ஏலி ஏலி லாமா சபத்தானி" என்பதன் பொருள் என்ன?
4) இயேசுவின் திருமுழுக்கு நிகழ்விலிருந்து வெளிப்படும் செய்தி யாது?
5) சமாரியன் யூதனுக்குச் செய்த சேவைகள் யாவை?
6) பார்த்திமேயுவின் நம்பிக்கையிலிருந்து கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்விற்கு கிடைக்கும் செய்திகள் நான்கு தருக.
7) யூத சமய சட்டப்படி தொழுநோயாளியை எவ்வாறு நோக்கினார்கள்?
8) இறைவனுக்கு முன்பாக வரி தண்டுபவன் எவ்விதம் வேண்டினான்?
9) புதிய ஏற்பாட்டில் காணப்படும் நற்செய்தி நூல்கள் எவை?
10) பத்துக் கட்டளைகளில் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பு பற்றி கூறப்படும் கட்டளைகள் எவை?

(10x4 = 40 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**



Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page